உ

SRI ARUMUGASWAMY THUNAI

**ஸ்ரீ ஆறுமுகசுவாமி ஸ்தோத்திரம்**

மரகத மயில்மேல் வரும்முருகா அரகர சிவசிவ ஆறுமுகவா
சரவண பவனே சண்முகனே வரந்தர வாவா என்முன்னே
அரவணி சிவனருள்பாலா வரமருள் பரமதயாளா!

**ஸ்ரீ விநாயகர் ஸ்தோத்திரம்**

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம் பிறை போலும் மெயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்து அடி போற்றுகின்றேனே!

**ஸ்ரீ சிவசத்தி ஸ்தோத்திரம்**

சிவ சிவ என்கிலர் தீவினையாளர்
சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்
சிவ சிவ என்றிடத் தேவருமாவார்
சிவ சிவ என்னச் சிவசக்திதானே

# அருள்மிகு ஆறுமுகசுவாமி தேவஸ்தானம்

# ARULMIGU ARUMUGASWAMY DHEVASTHANAM

**JALAN JUBLI PERAK, BUKIT LAGI, 01000 KANGAR, PERLIS**

(PPM-001-09-05081987) www.arumugaswamy.com Tel : 04-9764441

# ஸ்ரீ ஸ்கந்த சஷ்டி விழா

# SRI SKANDA SASHTI VIZHA

## 10/11/2026 - 16/11/2026

நிகழும் மங்களகரமான பராபவ வர்ஷம் ஐப்பசி மாதம் 29ம் நாள் வருகின்ற ஷஷ்டி திதியும் உத்திராடம் நட்சத்திரமும், ஞாயிற்றுக்கிழமையும் ( *15/11/2026* ) கூடிய சுபயோக, சுபதினத்தில் நமது கங்கார் ஸ்ரீ ஆறுமுகஸ்வாமிக்கு ஸ்ரீ ஸ்கந்த ஷஷ்டி விழாவானது இனிதே நடைபெற திருவருள் கூடியுள்ளது, அது சமயம் *10/11/2026* முதல் *16/11 /2026*ம் தேதி வரையில் விஷேச பூஜைகளானது பத்திரிக்கையில் உள்ளவண்ணம் நடைபெற இருக்கிறது, ஸ்ரீ முருகப்பெருமான் பக்தகோடிகள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு நமது ஸ்ரீ வள்ளிநாயகி ஸ்ரீ தெய்வநாயகி உடனமர் ஸ்ரீ ஆறுமுகஸ்வாமியின் பேரருள் பெற்றுய்யுமாறு பக்தியுடன் அழைக்கின்றோம்

## ஸ்ரீ ஸ்கந்த சஷ்டி விழாவின் நிகழ்வுகள்

### *SRI SKANDA SASHTI VIZHAAVIN NIGALVUGAL*

*(10/11/2026 - 14/11/2026)*

மாலை மணி *5.30pm* : மஹா அபிஷேகம் / *MAHA ABISHEGAM*

இரவு மணி *7.00pm* : சிறப்பு பூஜை நடைபெறும் / *SIRAPPU POOJAI NADAIPERUM*

# ஸ்ரீ ஷத்ரு ஸம்ஹார ஹோமம் & சூரஸம்ஹாரம்
# SRI CHATRU SAMHARA HOMAM & SOORASAMHARAM
(ஞாயிற்றுக்கிழமை / 15-11-2026 / SUNDAY)

## 14 - 11 - 2026

காலை மணி 8.30-க்கு - ஸ்ரீ கணபதி ஹோமம்
மாலை மணி 5.30-க்கு - சத்ரு ஸம்ஹார ஹோமம் (முதற்கால பூஜை)
முருகப்பெருமான் அம்பாளிடம் வேல் வாங்கும் வைபவம் நடைபெறும்

## 15 - 11 - 2026

காலை மணி 8.30-க்கு
பூர்வாங்கம் பூஜை ஆரம்பம். ஸ்ரீ சத்ருஸம்ஹார ஹோமம்
(இரண்டாம் கால பூஜை),
சஹஸ்ர (1008) சங்கு பூஜை, மூல மந்திர ஜப ஹோமம்,
மஹா பூர்ணாஹுதி நடைபெறும்.

ஸ்ரீ ஆறுமுகசுவாமிக்கு சஹஸ்ர (1008) சங்கு அபிஷேகம் நடைபெற்று,
கடங்கள் யாக மண்டபத்தில் இருந்து புறப்பட்டு ஆலயம் வலம் வந்து,
ஸ்ரீ ஆறுமுகசுவாமிக்கு கும்ப தீர்த்த அபிஷேகம் நடைபெற்று,
மஹா தீபாராதனை செய்து விபூதி பிரசாதம் வழங்கப்படும்.

மாலை மணி 6.00-க்கு நித்திய பூஜை. தொடர்ந்து விசேஷ பூஜையுடன்
ஸ்ரீ ஆறுமுகசுவாமி சூரசம்ஹாரத்திற்கு புறப்பட்டு,
அசுரனை சம்ஹாரம் செய்வார்.

பிறகு சுவாமிக்கு பிராயச்சித்த ஹோமம் நடைபெற்று, பச்சை சாற்றி,
மஹா தீபாராதனை நடைபெற்று விபூதி பிரசாதம் வழங்கப்படும்.

## 16 - 11 - 2026

காலை மணி 8.30-க்கு ஸ்ரீ ஸ்கந்த ஹோமம் நடைபெறும்





# உபய நிகழ்வுகள் / UBAYA NIGALVUGAL

| நாள்<br>DATE | கிழமை<br>DAY | உபயத்தார்<br>UBAYATTAR |
|---|---|---|
| 10-11-2026<br>ஐப்பசி 24 | செவ்வாய்<br>TUESDAY | அமரர் திரு சே. பெரியசாமி குடும்பத்தினர்<br>FAMILY MEMBERS OF LATE Mr S. PERIYASAMY - JEJAWI |
| 11-11-2026<br>ஐப்பசி 25 | புதன்<br>WEDNESDAY | இணை பேராசிரியர் டாக்டர் ரமணி - திருமதி சியாமளா குடும்பத்தினர்<br>Assoc. Prof. Dr. RAMANI - Mrs SIAMALA & FAMILY - KANGAR |
| 12-11-2026<br>ஐப்பசி 26 | வியாழன்<br>THURSDAY | திரு திருமதி முருகன் - மனோன்மணி குடும்பத்தினர்<br>Mr. & Mrs. MURUGAN - MANON MANI FAMILY - BESERI |
| 13-11-2026<br>ஐப்பசி 27 | வெள்ளி<br>FRIDAY | திரு திருமதி மோகனாராஜ் - கவிதா குடும்பத்தினர்<br>Mr. & Mrs. MOHANARAJ - KAVITHA FAMILY - SUNGAI PETANI |
| 14-11-2026<br>ஐப்பசி 28 | சனி<br>SATURDAY | டாக்டர் சரவணன் கண்ணாயிரன் குடும்பத்தினர்<br>Dr. SARAVANAN KANNAIRAN & FAMILY - IPOH |
| 15-11-2026<br>ஐப்பசி 29 | ஞாயிறு<br>SUNDAY | டத்தோ' டாக்டர் ஹரி ராம் - டத்தின் பவாணி குடும்பத்தினர்<br>DATO' Dr. HARI RAM - DATIN BAVANIE & FAMILY - KANGAR |
| 16-11-2026<br>ஐப்பசி 30 | திங்கள்<br>MONDAY | சரிகாட் கிருஷ்ணன் நாயர் & சன்ஸ் (KNS)<br>SYARIKAT KRISHNAN NAIR & SONS (KNS) - KANGAR<br>டாக்டர் K. சஷிதரன் - திருமதி சௌமியா குடும்பத்தினர்<br>Dr K. SASHETHERAN - Mrs SOWMIYA & FAMILY - KL |

## திருக்கல்யாணம் / THIRUKALYANAM

( திங்கட்கிழமை / 16-11-2026 / MONDAY)

மாலை மணி 6.00pm : நித்திய பூஜை நடைபெறும் / TEMPLE POOJA

இரவு மணி 7.00pm : சீர்வரிசை எடுத்தல், தொடர்ந்து திருக்கல்யாண வைபவம்

THIRUKALYANAM CEREMONY

**ஸ்ரீ வள்ளி ஸ்ரீ தெய்வானை சமேதராய் ஸ்ரீ ஆறுமுகசுவாமிக்கு**
**திருக்கல்யாண வைபவ அழைப்பிதழ்**

அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகர்
சகல ஜீவராசிகளையும் ரட்சிக்கும்
ஸ்ரீ பார்வதி - ஸ்ரீ பரமேஸ்வரனுடைய
கனிஷ்ட குமாரன் (இளைய குமாரன்)
**அருள்மிகு ஆறுமுக சுவாமியான**
**ஸ்ரீ ஆறுமுக பெருமானும்**



ஸ்ரீ தேவேந்திரன் - ஸ்ரீ இந்திராணி
இவர்களின் குமாரத்தி
**ஸ்ரீ தெய்வானைக்கும்**

நம்பிராஜன்
இவர்களின் குமாரத்தி
**ஸ்ரீ வள்ளிக்கும்**

## ஸ்ரீசத்ரு சம்ஹார

சத்ரு சம்ஹார ஹோமம் என்பது. நாம் பக்தியுடன் போற்றும் முருகப் பெருமான் என்னும் சுப்பிரமணியர் குறித்து செய்யப்படும் ஹோம வழிபாடு ஆகும். தெய்வ தம்பதிகளான சிவபெருமான் பார்வதி தேவியின் மகனாக அவதரித்த சுப்பிரமணியரை, பெரும் சக்தி வாய்ந்த தெய்வமாக பண்டைய ரிக் வேதம் போற்றுகிறது. தூய அன்பின் அடையாளமாகவும் திகழும் இவர், தீய சக்திகளிடமிருந்து நம்மைக் காத்து, பல நன்மைகளை அருளக் கூடியவர்.

சத்ரு சம்ஹார ஹோமம், எதிரிகளை வெற்றி கொள்ள உதவும் வழிபாடாகும். இதன் மூலம் வெளிப்படும் பெரும் ஆற்றல் நம்மை பாதுக்காக்கும் சக்தி வாய்ந்த கவசமாக விளங்குகின்றது.

### சத்ரு சம்ஹார ஹோமத்தின் சிறப்பம்சங்கள்

(சத்ரு சம்ஹார ஹோமத்தின் மூலம், பகவான் சுப்பிரமணியரின் அருளை நாம் பெறலாம் இதன் மூலம் தெய்வ சாபங்கள், நவகிரக தோஷங்கள் பித்ரு சாபங்கள் நீங்கும். கர்ம வினைகளைத் தீர்த்துக் கொள்ள வழி பிறக்கும் கண் திருஷ்டி, பயம். மன சோர்வு, நோய்கள் கடன் தொல்லைகள் போன்றவற்றிலிருந்து விடுதலை கிடைக்கும். குழந்தை பாக்கியம் கிடைக்கும். குடும்ப உறவுகள் மேம்படும்.

### பாரம்பரிய முறை ஹோமம்

சத்ரு சம்ஹார ஹோமம், வேத சாஸ்திரங்களை நன்கு கற்றறிந்த அனுபவம் வாய்ந்த புரோகிதர்களால், ஆகம விதிப்படி பக்தி சிரத்தையுடன், முறையாக நடத்தப்படுகிறது. உங்கள் தேவைக்கும். வசதிக்கும் ஏற்ற வகையில் எந்த இடத்திலும் இந்த ஹோமத்தை செய்யலாம். இதில் பங்கு கொள்வதன் மூலம், உங்களை பாதிக்கும் அனைத்து தீய சக்திகளிடமிருந்தும். உங்களுக்கு, தெய்வீக பாதுகாப்பு கிடைக்கும்.

### பிரசாதங்கள்

இந்த ஹோம வழிபாட்டில், ரட்சை என்று அழைக்கப்படும் ஹோம பஸ்மம் மற்றும் குங்குமம் உங்களுக்கு பிரசாதமாக வழங்கப்படும் இதனை உங்கள் பூஜை அறையில் வைத்து தினமும் உங்கள் நெற்றியில் பூசி இறைவனின் அருளைப் பெறலாம்

## SRI CHATRU SAMHARA HOMAM

*Chatru Samhara Homam is a hooma worship performed for Lord Muruga, whom we adore with devotion. The ancient Rig Veda extols Subrahmanya, who was incarnated as the son of the deity couple Lord Shiva-Parvati, as a very powerful deity. He is a symbol of pure love, protects us from evil forces and bestows many benefits.*

*Chatru Samhara Hoomam is a ritual that helps to conquer enemies. The great energy that emerges through this becomes a powerful shield that protects us.*

*Highlights of Chatru Samhara Homam - Through Chatru Samhara Homam, we can get the grace of Lord Subrahmanya. By this the curses of gods, Navagraha doshas and pitru curses will be removed. There will be a way to resolve karmic actions. Get relief from eye strain, fear, mental fatigue, diseases, debt problems etc. Child will be blessed. Family relations will improve.*

*The Traditional Method of Hoomam - Chatru Samhara Hoomam is properly conducted by experienced priests who are well versed in Vedic scriptures, according to Agama rules, with devotional diligence. This hoomam can be done at any place as per your need and convenience. By participating in it, you will get divine protection from all the evil forces that affect you.*

*Offerings - In this hooma worship, you will be offered hooma bhasma and kumkum known as ratsai. You can keep this in your pooja room and apply it on your forehead daily to get the grace of God.*

**PAMPHLETS SPONSORED BY :**
**HARI RAM FERTILITY CENTER,**
**KPJ Perlis Specialist Hospital, Kangar, Perlis.**